# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1522 - 2007 නොවැම්බර් 02 වැනි සිකුරාදා - 2007.11.02

*1522 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 983 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, நவெம்பர் 09 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஒற்றோபர் 26 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத்தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத்தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

உதவி வெடிபொருட் கட்டுப்பாட்டாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை – 2007

உதவி வெடிபொருட் கட்டுப்பாட்டாளர் பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான பகிரங்கப் போட்டிப் பரீட்சையொன்று பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய செயலாளரின் பொருட்டு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2008, சனவரி மாதமளவில் நடாத்தப்படும். அதற்காக கீழ்க்காணப்படும் அறிவித்தலின் பிரகாரம் ஆண் பகுதியினரிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தேவைப்படும் தகைமைகள்.**– ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கீழ்க்காணப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்க வேண்டியதுடன் அவைகளை நிரூபிப்பதற்காக திருப்திகரமான சான்றுகள் சமர்ப் பித்தல் வேண்டும் :–

(அ) இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வித் தகைமைகள் :***

(1) வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்காக –

அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் வகுப்புச் சித்தியுடன் இரசாயன விஞ்ஞானம் விடயத்தில் விசேட பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் முதல் வரிசை வகுப்பு சித்தியினையோ அல்லது இரண்டாம் வரிசை உயர் வகுப்புச் சித்தியுடன் இரசாயன விஞ்ஞானம் விடயத்தில் விஞ்ஞானமானி (பீ. எஸ்ஸி) பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகமொன்றின் இரசாயன விஞ்ஞானம் விடயத்தில் விஞ்ஞானமானி (பீ. எஸ்ஸி) பட்டத்துடன் இரசாயன விஞ்ஞானம் விடயத்தில் பின் பட்டப்படிப்பினைப் பெற்றிருத்தல்.

அல்லது

இரசாயன விஞ்ஞான நிறுவனத்தின் பட்டயம் பெற்ற அங்கத்தவரொருவராதல்.

2. உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு.– (அ) அங்கீகரிக் கப்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் இரசாயன விஞ்ஞானம் விடயத்துடன் விஞ்ஞானவேதி பட்டத் துடன் முன் கிட்டிய 5 வருட கால திருப்திகரமான சேவைக்காலத்துடன் வெடிபொருட் கட்டுப்பாட்டா ளரின் மேலாய்வின் கீழ் வெடி பொருள் விடயத் துறையில் 10 வருட கால தேர்ச்சியினைப் பெற்றுள்ள பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் சேவையில் ஈடுபட்ட அமுல்படுத்து உத்தியோகத்தரொருவராதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதியான 2007.11.30 ஆந் திகதிக்கு வயது 18 க்குக் குறையாததும் 45 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில்/உள்ளூர் அரச சேவையில் ஈடுபட்டவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது). நாட்டின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்காக நல்ல தேகாரோக்கிய தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். நல் நடத்தையுடையவராதல் வேண்டும்.

(இ) கீழ்க்காணப்படும் கடிதாவணங்கள் வேண்டப்படும் போது சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர் தயாரா யிருத்தல் வேண்டும் :

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. பட்டச் சான்றிதழ் ;
3. நற்சான்றுப் பத்திரங்கள் இரண்டு ;
4. ஆங்கிலம்/தமிழ் உம் ஆங்கில மொழிகளால் சித்தியெய்திய உயர் பரீட்சை.

**குறிப்பு.**– விண்ணப்பப்பத்திரத்துடன் எதுவித கடித ஆவணங்களோ அல்லது பிரதிகளோ (பரீட்சைக் கட்டணங்கள் கொடுக்கப்பட்ட பற்றுச்சீட்டைத் தவிர) இணைத்தல் ஆகாது.

3. **சேவையில் ஈடுபடுத்தும் விதிகளும் சேவை நிபந்தனைகளும்.**– (i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியச் சம்பளமுடையது. விதவை, அநாதை நிதியத்திற்கு சந்தாப் பணம் செலுத்துதல் வேண்டும் ;

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தற்போது அரச சேவையில் ஈடுபட்டு இல்லாது விடில் அவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள் ;

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தற்போது அரச சேவையில் ஈடுபட்ட நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள முடையதுமான பதவிகள் கொண்டிருப்பவர்களாயின், அவருடைய நியமனம் ஒரு வருட கால சேவை பார்க்கும் காலத்திற்கு உட்படும் ;

(iv) தகுதிகாண் காலத்தில் சிங்களத்தில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், பதவியில் நிரந்தரப்படுத்தும் ஏனைய காரணிகளுக்குட்பட்ட உரிய சிங்களத் தேர்ச்சியடைதல் பரீட்சைகளில் சித்தியெய்தல், மீது தங்கும்.

4. **சம்பளமும் கொடுப்பனவுகளும்.**– மாதாந்தம் ரூபா 22,935 – 10 x 645 – 8 x 790 – 17 x 1,050 – ரூபா 53,555. (பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 3 வருட காலத்திற்குள் முதலாவது தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

5. இப்பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கை நிருவாக சேவையின் II/II பதவியின் உத்தியோகத்தர்களுக்கு

உரித்தான திறமைகாண் பரீட்சையில் கீழ்க்காணும் விடயங்களில் சித்தியெய்தல் வேண்டும் :-

(1) தாபனக் கோவை

(2) நிதிப் பிரமாணங்கள்

(3) சட்டம்

(4) இரண்டாம் மொழி - வாய் மூலப் பரீட்சை

6. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) இன் தொடக்கத்தில் சொல்லப்பட்ட அரச சேவை நியமனங்களைச் சார்ந்த பொது நிபந்தனைகள் இந்நியமனத் திற்காக தொடர்புடையதாகும்.

7. **விண்ணப்பங்களும் பரீட்சைக் கட்டணங்களும்.**- (அ) இப்பரீட் சைக்காக பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு முன்னர் வருமானத் தலைப்பு 6 உப தலைப்புகள் 1-4 விடயம் (4) க்கு கழிக்குமாறு கச்சேரிக்கோ அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கோ பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாத வண்ணம் ஒட்டி அனுப்புதல் வேண்டும். காசு செலுத்திய பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றையும் அனுப்பும் விண்ணப்பத்தின் படப்பதிவுப் பிரதியொன்றையும் தம் வசம் வைத்திருத்தல் உபயோகப்படக்கூடும்.

(ஆ) விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரரிடம் பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிட்டதும், அதனை பத்திரிகை அறிவித்தல் மூலம் தேர்வுநாடி களுக்கு அறிவிக்கப்படும். பரீட்சைக்குரிய திகதிக்கு 7 நாட்களுக்கு முன்னராயினும் அனுமதி அட்டை பெறாத தேர்வுநாடிகள் கொழும்பு 3, பாலதக்ஷ மாவத்தை, இலக்கம் 15/5 எனும் முகவரியிலுள்ள பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் செயலாளரிடம் கீழ்க்காணப்படும் விபரங்களை அறிவித்தல் வேண்டும் :-

1. பரீட்சையின் பெயர் ;

2. தேர்வுநாடியின் முழுப் பெயர் ;

3. முகவரி ;

4. விண்ணப்பப்படிவங்கள் தபாலிலிட்ட திகதி, தபால் அலுவலகம், பதிவெண்.

8. பரீட்சைக்கு அமர்தல்.- தேர்வுநாடியொருவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள பரீட்சை மன்றத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோன்றும் திகதியில் தேர்வுநாடியிடம் வெளியிட்டுள்ள பரீட்சை அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தைச் சான்று படுத்திக்கொண்டு பரீட்சை அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சை கொழும்பில் நடாத்தப்படுவதோடு பரீட்சைக்கு வருவதன் பொருட்டு பயணக் கட்டணங்கள், போக்குவரத்துக் கொடுப்பனவு ஆகியவை எதுவும் எவருக்கும் உரித்தாகாது.

**குறிப்பு.**- தேர்வுநாடியொருவர் பரீட்சையில் தோன்றுவதற்காக அனுமதி அட்டையொன்றை வெளியிடுதல் அவர் பரீட்சைக்குத் தோன்றுவதற்குத் தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளுதல் எனக் கருதுதல் ஆகாது.

**விண்ணப்பிக்கும் முறை.**- (அ) இவ்வறிவித்தலின் முடிவில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப சென்டிமீட்டர் 21X29 (ஏ4) அளவிலான பத்திரத்தில் இருபக்கத்தினையும் உபயோகப்படுத்திக்கொண்டு படிவங்களைத் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 2007 நவெம்பர் 30 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதம் கொழும்பு 3, பாலதக்ஷ மாவத்தை, இலக்கம் 15/5 ஆம் இடத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் செயலாளரிடம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்கத்தின் மேல் மூலையில் "உதவு வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

(இ) அரச சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் ஈடுபட்ட விண்ணப்பதாரர்கள் தனது திணைக்களத் தலைவர் ஊடாகவும் அரச கூட்டுத்தாபனங்கள்/உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப் பத்திரங்களைத் தனது நிறுவனத் தலைவர்கள் ஊடாகவும் உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) தொடர்புபட்ட மாதிரிப் படிவத்திற்கேற்றவாறு அமையாததும் பூர்த்தியடையாததும் அவ்வாறே தாமதமாகியும் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் எதுவித அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்கள் தபாலில் தொலைதல், தாமதமாகுதல் பற்றி செய்யப்படும் முறைப்பாடுகள் கவனித்துப் பார்க்கப்படமாட்டாது.

(உ) விண்ணப்பப்பத்திரத்தின் தலைப்பு தொடர்புபட்ட விதம் சிங்களம்/தமிழ் மொழியினால் மாத்திரமல்ல ஆங்கில மொழியினாலும் எழுதுதல் வேண்டும்.

10. **தேர்வுநாடியின் அறிமுகம்.**- தான் தோன்றும் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் பரீட்சை மன்று அதிபர் திருப்தியடையும் விதத்தில் தேர்வுநாடியொருவர் பரீட்சை மண்டபத்தில் தனது அறிமுகத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ் காணப்படும் கடித ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

1. ஆட்பதிவு ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிமுக அட்டை.

2. செல்லுபடியாகும் வெளிநாட்டு பயண அனுமதிப் பத்திரம் (பரீட்சை திகதிக்கு 3 வருட அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட)

11. **பிழையான தகவல்கள் வழங்குதல்.**- இப்பரீட்சையில் தோற்றுவதற்கு எவரேனும் தேர்வுநாடியொருவருக்குத் தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் வேளையிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் செயலாளருக்கு அதிகாரமுண்டு. தேர்வு நாடியொருவர் குறிப்பிட்ட ஏதேனுமொரு விபரம் பிழையானதென அறிந்தே குறிப்பிட்டுள்ளமை தெரிந்திருந்தால் அவர் சேவையிலிருந்து விலக்கப்பட இடமுண்டு. இவ் வர்த்தமானியில் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகளுக்கான விதிகளையும் அறிவுறுத்தல்களையும் அனுசரித்தல் வேண்டும்.

*12.* **மொழிமூலம்.**- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழிகளில் நடாத்தப்படும்.-

(அ) தேர்வுநாடியொருவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைகள் பெற்ற ஊடக மொழியிலேயே இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஆ) தேர்வுநாடியொருவர் சகல வினாக்களுக்கும் ஒரே மொழியிலேயே பதில் எழுதுதல் வேண்டும்.

(இ) பரீட்சையில் மொழி ஊடகத்தினை மாற்றுவதற்கு அனுமதி கிடைக்காது.

*13.* **பரீட்சை முறை.**- விடயங்கள் மூன்றைக்கொண்ட எழுத்துமூலப் பரீட்சையாகும்.

***பகுதி அ*** -

1. *கிரகித்தல்* - இரண்டு மணித்தியால வினாத்தாள் - 100 புள்ளிகள்
2. *நுண்ணறிவுப் பரீட்சை* - ஒரு மணித்தியால வினாத் தாள் - 100 புள்ளிகள்
3. *பயிற்சி இரசாயன விஞ்ஞானம்* - இரண்டு மணித் தியால வினாத்தாள் - 100 புள்ளிகள்

***பகுதி ஆ*** -

**'**பகுதி அ**'** வின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% அல்லது அதற்கு மேலாக பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுத்து அப்புள்ளிகளைக் கூட்டுவதன் மூலம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கும் முதன்மைப் பட்டியல் தயாரிக்கப்படும்.

*14.* **பாடத்திட்டம்** :

*விடய இல. 1 : கிரகித்தல்* - இக்கேள்வித் தாள் இரண்டு பிரவுகளைக் கொண்டுள்ளது. முதலாம் பகுதிக்கு ஒரு கட்டுரையும் ஒரு பொழிப்பும் உள்ளடங்கும். மொழி உபயோகிப்பு பற்றி தேர்வுநாடியின் அறிவை பரிசீலிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பந்திகள் சிலவற்றை இரண்டாம் பாகம் கொண்டுள்ளது. இப்பந்திகளை அடிப்படையாகக் கொண்டு கீழ் கோடிடப்பட்ட சொற்களால் கருத்தினை தனி வசனத்தால் தெரிவிக்குமாறு அல்லது அது தொடர்பாக விசாரிப்புக் குறிப்புகளை எழுதிக் குறிப்பிடுமாறு அல்லது மாற்றுமுறைகள் பிரிவினால் மிகச் சிறந்த கூற்றினைத் தேரந்தெடுத்து காண்பிக்குமாறு தேர்வுநாடிகளுக்கு அறிவிக்கப்படும். (2 மணித்தியால வினாத்தாள்)

*விடய இல. 2 : நுண்ணறிவுப் பரீட்சை* - தேர்வுநாடியின் தர்க்கரீதியான விபரங்களும் விபரிப்புத் திறமையையும் பிழையின்றி சம்பவ ஊகங்களுக்கு வரும் திறமையைப் பற்றி அளவிடுதலை நோக்காகக் கொண்டு தயாரித்த விடயத் தொடர்புபட்ட பொருள்நோக்கு கேள்விகள் உள்ளடங்கிய கேள்விப்பத்திரமாகும். (ஒரு மணித்தியால வினாத்தாள்)

*விடய இல. 3 : பயிற்சி இரசாயன விஞ்ஞானம்* - இக்கேள்வித் தாள் தயாரிக்கப்படுவது இலங்கையின் புவியியல் பூலோக அமைப்பு, கனியப்பொருள் வள விருத்தி - பொருளாதார அபிவிருத்திக்காக இரசாயன விஞ்ஞான அடிப்படை, வெடி பொருட்கள் அளவமைப்பும் உபயோகமும், வெடி பொருட்கள் சட்டமும் தற்கால திருத்தங்களும் பற்றிய கிரகிக்கும் அறிவைப் பரிசீலிப்பதற்காக (இரண்டு மணித்தியால வினாத்தாள்)

*15.* **தேர்ந்தெடுக்கும் முறை.**- (1) 1990.03.09 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட திறமையின் மீது சேர்த்துக்கொள்தல் நடாத்தப்படும். எவ்வாறாயினும் குறித்த தொகையினைத் தீர்மானிப்பதில் ஏதேனும் கஷ்டம் ஏற்படுமாயின், அதன் கடைசித் தீர்ப்பு அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

(2) போட்டிப் பரீட்சையில் தேர்ந்தெடுத்தவர்களின் தகுதியைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவும் சான்றிதழ்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவும் அவர்கள் அழைக்கப்படுவார்கள். அவ் வேளையில் அவர் தான் குறிப்பிட்ட சகல விபரங்கள் சம்பந்தப்பட்ட கடித ஆவணங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

*16.* சகல விண்ணப்பதாரரும் பதவி தொடர்புபட்ட பரீட்சைக்காக விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு முன்னர் சகல தகமைகளையும் கட்டாயமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*17.* இவ்வறிவித்தலில் குறிப்பிடாத ஏதேனும் விடயம் பற்றி ஏதேனும் சிக்கல்கள் ஏற்படுமாயின் அது சம்பந்தமாகவும் பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை தொடர்பாகவும் அரச சேவை ஆணைக் குழு தீர்மானம் எடுப்பதோடு, அது கடைசித் தீர்மானமாகும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 3,

**பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு**

உதவி வெடிபொருட் கட்டுப்பாட்டாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2007

(அலுவலக உபயோகத்திற்காக)

1. போட்டிக்குத் தோற்றும் மொழி ஊடகம் :-----.
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)
(தொடர்புபட்ட இலக்கத்தைச் சதுரத்தினுள் எழுதவும்.)

2. வர்த்தக அறிவித்தலுக்கேற்ப நீங்கள் வெளி விண்ணப்பதாரரொருவராயின் - 1 எனவும், உள் விண்ணப்பதாரரொருவராயின் - 2 எனவும் சதுரத்தினுள் எழுதவும் :-----.

3. முதல் எழுத்துக்களைப் பின்னேயிட்டு, முதலெழுத்துக்களுடன் கடைசியில் இடும் பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதுதல் வேண்டும்.
*உதாரணம் :* SILVA, A.B.)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. நுழைவுப் பத்திரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதுதல் வேண்டும்.)

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :-
(விவாகமானவராயின் - 1, விவாகமாகாதவராயின் - 2)
(உரிய இலக்கத்தை சதுரத்தினுள் எழுதவும்)

7. இனம் :-
(சிங்களம் - 1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, ஏனைய - 5) (தொடர்புபட்ட இலக்கத்தை சதுரத்தினுள் எழுதவும்)

8. (i) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தகைமகள் :-

| பட்டம் டிப்ளோமா | வருடம் | விடயங்கள் | வகுப்பு சித்தி | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) சித்தியெய்தியுள்ள அதியுயர் பரீட்சை :-----.

(அ) சிங்களத்தில் :-----.
(ஆ) தமிழில் :-----.
(இ) ஆங்கிலத்தில் :-----.

9. (i) பிறந்த திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) 2007.11.30 ஆந் திகதின்று வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

10. செய்த தொழில்கள் பற்றிய விபரங்கள் :-----.
(ஏற்புடைத்தாயின்)

| திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயர் | ஏற்ற பதவி | காலம் | | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | |
| | | | | |

11. பரீட்சைக் கட்டணங்கள் கொடுத்து பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினைக் கழறாதவாறு இங்கு ஒட்டுங்கள் :-

(i) இலக்கம் :-----.
(ii) திகதி :-----.
(iii) வெளியிட்ட அலுவலகம் :-----.

12. வதிவிடம் பற்றிய விபரங்கள் :-

(i) பிரதேச செயலாளர் பிரிவு (வசிக்கும்) :-----.
(ii) கிராம உத்தியோகத்தர் பிரிவு :-----.
(iii) மாவட்டமும் அங்கு குடியிருப்பது எப்போது இருந்து என்பதும் :-----.

13. மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக் கைக்கும் எட்டிய விதம் உண்மையானவை எனவும் பிழை யற்றவையெனவும் தெரிவிக்கிறேன். இப்பரீட்சை பற்றிய நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் பிழையான விபரங்கள் அறிவித்திருந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது அதற்கு பின்னரோ பரீட்சை விண்ணப்பத்தை இரத்துச் செய்ய முடியுமெனவும், தேர்ந்தெடுத்த பின்னர் அது தெரிய வந்தால் சேவையிலிருந்து தாழ்த்தப்படுவதற்கும் உள்ளாவேன் என்பதையும் அறிவேன்.

.............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

14. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு. ............................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் என் முன்னிலையில் 200 ............ ஆந் திகதி அவருடைய கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

...................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரினது கையொப்பம்.

திகதி :-----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.

(விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலை யொன்றின் அதிபர் அல்லது சத்தியம் செய்த ஆணையாளரொருவர், அல்லது சட்டத்தரணியொருவர் அல்லது வருடமொன்றுக்கு ரூபா 2,30,700 க்குக் குறையாத ஒன்றிணைந்த சம்பளம் பெறும் அரச சேவையின் நிரந்தர பதவியொன்றை ஏற்றுள்ள உத்தியோகத்த ரொருவரால் சான்றுப்படுத்துதல் வேண்டும்.)

15. **திணைக்கள/நிர்வாகத் தலைவரின் சான்றிதழ் :**
(உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக)

இவ் விண்ணப்பதாரரான திரு. .............................................
இத் திணைக்களத்தில்/உள்ளூராட்சிச் சபையில்/நிறுவனத்தில்

சேவையாற்றுகிறார். அவர் நிரந்தர ஓய்வூதியச் சம்பளமுடைய/ தற்காலிக பதவியொன்றை வகிக்கிறார். கடந்த .......................... காலத்தில் அவர் சம்பள உயர்வுகள் சகலவற்றையும் பெற்றுக்கொண்டுள்ளமையும், அவர் எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் (எச்சரிக்கைகளைத் தவிர) உட்பட்டு இல்லையெனவும், அவர் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் தற்போதுள்ள பதவியினால் விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.......................................................
திணைக்கள/நிர்வாகத் தலைவரின்/
அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் :-----.
திகதி :-----.

11-193

திருத்தம்

**இலங்கை திட்டமிடல் சேவை வகுப்பு II-தரம் II பதவி தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2007**

2007.08.31 ஆந் திகதிய 1513 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தலில் '7 ஆம் பந்தியில் (ஆ) இன்கீழ்' குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை தொடர்பாக விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2007, நவெம்பர் 15 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளமையினை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

பீ. பீ. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு,
2007, ஒற்றோபர் 17.

11-212

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2007**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 02.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.10.2007 |
| | | வெள்ளி | 09.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.10.2007 |
| | | வெள்ளி | 16.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.11.2007 |
| | | வெள்ளி | 23.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.11.2007 |
| | | வெள்ளி | 30.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.11.2007 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 07.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.11.2007 |
| | | வெள்ளி | 14.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.11.2007 |
| | | வியாழன் | 20.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.12.2007 |
| | | வெள்ளி | 28.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.12.2007 |

**அட்டவணை-2008**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 04.01.2008 | .. | நண்பகல் 12 | வியாழன் | 20.12.2007 |
| | | வெள்ளி | 11.01.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.12.2007 |
| | | வெள்ளி | 18.01.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.01.2008 |
| | | வெள்ளி | 25.01.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.01.2008 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.